பக்கங்கள் 19

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 17 திங்கட்கிழமை 03.11.2025 | அதிர்வு 96 |
|---|---|---|---|

## மிரிஹான இசை நிகழ்ச்சி: இளைஞர், யுவதிகள் 31 பேர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, மிரிஹான பிரதேசத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 31 இளைஞர், யுவதிகள் போதைப்பொருளுடன் 02 ▶



# எப்போது தேர்தல் என்று இப்போது கூற முடியாது

## பொறுப்பான அமைச்சர் அறிவிப்பு

"மாகாண சபைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பதை உறுதியாகக் கூற முடியாது. தேர்தல் முறைமை குறித்து தீர்மானம் எட்டப்பட்ட பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை இடம்பெறும்."

- இவ்வாறு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மாகாண சபைத் தேர்தலைப் புதிய முறைமையில் நடத்துவதற்காகப் பழைய முறைமை கடந்த காலத்தில் இரத்துச் செய்யப்பட்டது. எனினும், இதற்குரிய நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை. சட்டமூலத்தைக் கொண்டு வந்த அமைச்சர் கூட அதற்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை. 02 ▶

## அரசுக்கு எதிரான பேரணியில் நாங்கள் பங்கேற்கமாட்டோம்!

### மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர எம்.பி. தெரிவிப்பு



"அரசுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் பேரணியில் நாங்கள் பங்குபற்றப் போவதில்லை. ஏனெனில் முறையான கொள்கை ஏதும் இல்லாமலே எதிர்க்கட்சிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஒன்றிணைகின்றன."

– இவ்வாறு மவ்பிம ஜனதா கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற 02 ▶



## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

களுத்துறை, ஹொரணையில் நேற்று இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. 02 ▶




முன்னர் தமிழர்கள் காட்டிக் கொடுப்புக்கு – அல்லது சேர்ந்திருந்து காட்டிக் கொடுப்பவர்களை – 'காக்கை வன்னியன்' என்று சொல்லுவார்கள். ஆனால் மிலேனியத்தின் முதல் தசாப்தத்தின் முதல் அரையாண்டுக்குப் பின்னர் காக்கை வன்னியன் என்பதற்கு பதிலாக 'கருணா' என்று சொல்வது தமிழ் மக்களின் வழக்கமாகி விட்டது.

வினை விதைத்தவன் வினையை அறுப்பது போல, சேர்ந்திருந்து தமிழினத்தைக் காட்டிக் கொடுத்தவர், இப்போது அவரைச் சேர்ந்திருந்து விட்டுக் கால் வாருபவர்களால் தொடர்ந்து நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறார்.

'தமிழ் மக்கள் விடுதலைப் விடுதலைப் புலிகள்' 02 ▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

கட்சியின் ஸ்தாபகத் தலைவர் கருணா தான். ஆனால் அவரிடம் இருந்து அந்தக் கட்சியைப் பறித்துக் கொண்டு அவரை வெளியே தள்ளினார் அது வரையில் அவரின் கீழ் செயற்பட்ட பிள்ளையான்.

அதன் பின்னர் ‘தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி’ என்ற கட்சியை ஸ்தாபித்து, தட்டுத் தடுமாறி அரசியல் செய்து, அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை ‘காட்டிக் கொடுப்பது’ போன்ற தமது பரவணித் தொழிலைத் தொடர்ந்து கொண்டிருந்தார் அவர்.

அங்கேயும் அதே கால்வாரல்தான். இதுவரை காலமும் கருணாவின் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் உப தலைவராக இருந்தவரும் அம்மான் படையணியின் தலைவராக செயற்பட்டவருமான ஜெயா சரவணா என்பவர் கருணா பக்கத்திலிருந்து பிரிந்து சென்று தனியான புதிய கட்சி ஒன்றை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்து வருகிறார் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

கருணாவின் சொந்த இடமான கிரானிலிருந்துதான் இந்தக் கட்சி உருவாகின்றது என்பது அடுத்த தகவல்.

விதைத்த வினையை எப்படியும் அறுவடை செய்துதானேயாக வேண்டும்?

* * *

மன்னாரில் புதிய காற்றாலையை அமைப்பதற்கான மிகப் பிரமாண்டமான விசிறியின் ஓர் அலகை திருகோணமலை துறைமுகத்திலிருந்து ஏற்றிக்கொண்டு மன்னாருக்குப் புறப்பட்ட பாரிய வாகனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை துறைமுகத்தின் வெளிப்புற வாயிலுக்கு அருகே கவிழ்ந்தது. துறைமுக வளாகத்தில் உள்ள புத்த கோவில் ஒன்றும் கொள்கலன் கட்டடம் ஒன்றும் பலத்த சேதமடைந்தன. வாகனத்தில் சாரதி மற்றும் பயணி காயமடைந்துள்ளனர்.

மன்னார்த் தீவில் அமைக்கப்பட்டு வரும் நான்கு காற்றாலைகளுக்கு தேவையான இத்தகைய பாரிய பாகங்கள் திருகோணமலை துறைமுகத்திலிருந்து மன்னாருக்கு தொடர்ச்சியாக அனுப்பப்பட்டு வருவது தெரிந்ததே.

இப்போது அமைக்கப்படும் நான்கு பாரிய காற்றாலைகளில் இரண்டு முழுமையாக அமைக்கப்பட்டு விட்டன. மூன்றாவதன் விசிறி ஒன்றே இப்போது விபத்தில் வீழ்ந்துள்ளது எனத் தெரிகிறது.

தற்போது மன்னார் தீவில் அமைக்கப்படும் 14 காற்றாலைகளில் நான்கு காற்றாலைகள் முதல் கட்டமாக முழுமையாக அமைக்கும் பணி முடியும் கட்டத்தை நெருங்குகின்றது. மிகுதிப் பத்தையும் பொறுத்தவரை அவற்றுக்கான அடித்தள வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தக் காற்றாலைகளின் அமைப்பு வேலைகளுக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை ஒரு சில டசின் நபர்களோடு தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றது.

அதை ஆரம்பத்தில் முன்னின்று வழிப்படுத்திய பிரதான மதத் தலைவர் போராட்ட வீச்சிலிருந்து சத்தம் சந்தடியின்றி வெளியேறி விட்டார் என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தேன். ஆனால் அவரின் வழிப்படுத்தலையும் மீறி, போதகர் ஒருவர் தன்பாட்டில் இப்போதும் தொடர்ந்தும் இவ்விடயத்தில் தீவிரம் காட்டி, சண்டப் பிரசண்டம் பண்ணி வருகிறார். அவருக்கு எதிராக மதத் தலைமை பீடம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

### இளைஞர், யுவதிகள்...

கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஹான - கிம்புலாவல என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்க்க வந்த இளையோர் குழுவொன்றே இவ்வாறு கைது செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

500 இற்கும் மேற்பட்டோர் இசை நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மிரிஹான குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 31 இளைஞர், யுவதிகளிடம் இருந்து பல்வேறு வகையான போதைப் பொருட்கள் மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

### எப்போது தேர்தல்...

எனவே, மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பது பற்றி முதலில் தீர்மானத்துக்கு வரவேண்டும். அனைத்து கட்சிகளின் இணக்கத்துடன் சிறந்த முறைமையை அறிமுகப்படுத்திய பின்னர் தேர்தல் நடத்தப்படும்.

ஜனநாயகத்தை வெளிப்படுத்துவதற்காக மக்களுக்கு உள்ள உரிமையை நாம் தடுக்கமாட்டோம். எனினும், கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைதான் பிரச்சினையாக உள்ளது. அது நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் நடவடிக்கை இடம்பெறும்.

தேர்தல் திகதி பற்றி தற்போது உறுதியாகக் கூற முடியாது. தேர்தல் முறைமை பற்றி இறுதி முடிவு எட்டப்பட்ட பின்னர் அது நடத்தப்படும்.” - என்றார்.

### துப்பாக்கிச்சூட்டில்...

2 போர் ரக துப்பாக்கியால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் ஹொரணை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

### அரசுக்கு எதிரான...

உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

“அரசின் அனைத்து கொள்கைத் திட்டங்களையும் எதிர்க்கும் நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. சிறந்த திட்டங்களுக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

தேசிய தொழிற்றுறையை மேம்படுத்த அரசிடம் எவ்வித திட்டங்களும் கிடையாது. கடந்த அரசு எவ்வாறு செயற்பட்டதோ அதேவகையில்தான் இந்த அரசும் செயற்படுகின்றது.

பெற்றுக்கொண்ட அரச முறைக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத காரணத்தால்தான் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. இந்த அரசும் கடன் பெறுவதையே பிரதான இலக்காகக் கொண்டுள்ளது.

அரசின் செயற்பாட்டை எதிர்க்கும் வகையில் எதிர்க்கட்சிகள் பலமாக இல்லை. அவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி அரசுக்கு எதிராகப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளார்கள்.

இந்தப் பேரணியில் நாங்கள் பங்கு பற்றப் போவதில்லை. ஏனெனில் எதிர்க் கட்சிகளிடம் உறுதியான கொள்கை கிடையாது.” - என்றார்.


**வட மாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை-2025**

“எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பராவார்.”

- தோமஸ் ஃபுல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)





# எதிரணிகள் ஒன்றிணைவு சாத்தியப்படுமா?

## சந்தேகம் என்கின்றார் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

"எதிரணிகள் ஒன்றுபட வேண்டும். அது நல்லது. அதனை நாம் வரவேற்கின்றோம். ஆனால், எதிரணிகள் ஒன்றிணைவு சாத்தியப்படுமா என்பது சந்தேகமே."

– இவ்வாறு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக எதிரணிகளால் எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் முன்னெடுக்கப்படவுள்ள பேரணி தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிரணிகளின் போராட்டம் பற்றி அந்தத் தரப்புகளிடம்தான் கேட்க வேண்டும். இருந்தாலும் எதிரணிகள் ஒன்றுபட வேண்டும். அவ்வாறு ஒன்றிணைவது நல்லது. ஆனால், அது சாத்தியப்படுமா என்பது சந்தேகமே.

நாம் கூட்டமொன்றை நடத்துவதாக இருந்தால் ஒரு கிழமைக்கு முன்பு இருந்துதான் தயார்படுத்தல் இடம்பெறும். ஆனால், இவர்கள் ஒரு மாதத்துக்கு முன்னரே தயாராகிவிட்டனர். மக்களைத் திரட்டுவதற்கு இவர்களுக்கு ஒரு மாதம் செல்லும் என்பது இதன்மூலம் புலப்படுகின்றது.

நாம் எதிரணியில் இருக்கும்போது சிறப்பாகச் செயற்பட்டோம். இணைய வேண்டிய இடங்களில் இணைந்து பயணித்தோம். இது ஜனநாயக பண்பாகும்." – என்றார்.

# சட்டவிரோத மணல் கடத்தல் முயற்சி பருத்தித்துறை பொலிஸாரால் தடுப்பு

## போதைப்பொருளும் மீட்பு





சட்டவிரோத மணல் கடத்தல் முயற்சி பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று முறியடிக்கப்பட்டது.

சட்டவிரோத மணல் கடத்தல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து , பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குடவத்தை பகுதியில் மறைந்திருந்த பொலிஸார், வாகனம் ஒன்றை மறிக்க முற்பட்ட போது, வாகனம் நிற்காது பயணித்துள்ளது.

இதையடுத்து ஆணிக்கட்டைகள் வீசி வாகனம் மடக்கிப்பிடிக்கப்பட்டது.

மணல் கடத்தலுக்கு பயன்படுத்திய பட்டா வாகனத்தின் மூன்று சக்கரங்களும் ஆணி கட்டை வீச்சில் சேதமடைந்த நிலையில் வாகனத்தை விட்டு சந்தேக நபர்கள் தப்பிச்சென்றுள்ளனர்.

இதையடுத்து மேற்படி வாகனம் மீட்கப்பட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவரப்படுள்ளது.

வாகனத்தில் சோதனை செய்த போது சிறிய பொட்டலங்களாக பொதி செய்யப்பட்ட 250 கிராமுக்கு அதிக எடை கொண்ட கேரள கஞ்சா போதைப்பொருளும் மீட்கப்பட்டன என்று பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தெரிவித்தார்.

சான்றுப்பொருள்களை நீதிமன்றத்தில் முற்படுத்த பருத்தித்துறை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# நவ. 7இல் பட்ஜட் முன்வைப்பு: ஆய்வு செய்வதற்கு விசேட குழு

## ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசால் முன்வைக்கப்படவுள்ள வரவு – செலவுத் திட்டத்தை ஆராய்ந்து, தர்க்க ரீதியிலான கருத்துக்களை முன்வைப் பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி திட்ட மிட்டுள்ளது.

இதற்காக விசேட குழுவொன்றை அந்தக் கட்சி நியமிக்கவுள்ளது.

கபீர் ஹாசீம், ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன மற்றும் மேலும் சில பொருளாதார நிபுணர்கள் அந்தக் குழுவில் இடம்பெறவுள்ளனர். அதே போல் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்குக் கருத்தரங்கு நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

வெறுமனே விமர்சனங்களை முன் வைக்காமல், புள்ளிவிவரம் மற்றும் விஞ்ஞானபூர்வமான கருத்துக்களை முன்வைக்கும் நோக்கிலேயே விடயங் களை எதிரணி எம்.பிக்களுக்குச் சுட் டிக்காட்டுவதற்கு இந்தக் குழு நியமிக் கப்படவுள்ளது எனத் தெரியவருகின் றது.

வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி நிதி அமைச்சர் ஜனாதி பதி அநுரகுமார திஸாநாயக்கவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படு கின்றது. இது 2 ஆம் வாசிப்பாகக் கரு தப்படும். 2 ஆம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 8 ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெறும். 14ஆம் திகதி மாலை 2ஆம் வாசிப்பு மீதான வாக் கெடுப்பு நடத்தப்படும்.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக் கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நவம்பர் 15ஆம் திகதி ஆரம்பமாகும். பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் 5ஆம் திகதி நடைபெறும்.

தேசிய மக்கள் சக்தி அரசின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அரச மொத்த செலவீனமாக 4 ஆயிரத்து 434 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

2026 பாதீட்டில் நிதி அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (634 பில்லியன் ரூபா)

பாதுகாப்பு அமைச்சுக்கு 455 பில்லி யன் ரூபாவும், சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சுக்கு 554 பில்லியன் ரூபாவும், கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சுக்கு 301 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படவுள்ளது.




# வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை!

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி யின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திருமதி சத்தியபாமா நவரட்ணம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சின் பாடசாலை அபிவிருத்தி பிரிவின் தமிழ் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு மதி பாலராணி ஸ்ரீதரன், விசேட அதிதி யாக கரவெட்டி கோட்டக் கல்விப்பணிப் பாளர் வேலுப்பிள்ளை புவனேந்திர ராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள னர்.



# யாழ். போதனா வைத்தியசாலையில் சகல வகை குருதிக்கும் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனைத்து வகைக் குருதிக் கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் குருதி வங்கிப் பிரிவினர் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில்,


"யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அண்மைக்காலமாக 'ஓ பொஷி டிவ்' குருதிக்குத் தட்டுப்பாடு நிலவிய நிலையில், தற்போது அனைத்து வகைக் குருதிக்கும் தட்டுப்பாட்டையும் பற்றாக் குறையையும் எதிர்கொண்டுள் ளோம்.

குருதி வங்கியில் 330 பைந்த் குருதி இருக்க வேண்டிய இடத்தில் தற்போது 226 பைந்த் குருதியே இருப்பில் இருக் கின்றது. தினமும் 35 - 40 பைந்த் குருதி எமது இரத்த வங்கியால் நோயாளர்க ளுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

தற்போது விபத்துக்கள், சத்திர சிகிச் சைகள் அதிகரித்துச் செல்வதால் குருதி யின் தேவை தினமும் அதிகரித்துச் செல்கின்றது. குருதிக்கொடை முகாம்கள் மூலம் குருதி சேகரிக்கப்பட்டாலும் அது வும் பற்றாக்குறையாகவே இருக்கின் றது.

எனவே, குருதிக்கொடையாளர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் பின்பக்க நுழைவாயி லின் ஊடாகத் தினமும் காலை 8 மணி யிலிருந்து மாலை 4 மணி வரை வருகை தந்து குருதிக் கொடை செய்து உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.





# கணேமுல்ல சஞ்சீவ கொலை ஐவரின் திட்டத்தால் நடந்தது

## பொலிஸ் விசாரணையில் தகவல்

கணேமுல்ல சஞ்சீவ கொலை ஐவ ரின் திட்டத்திற்கமைய இடம்பெற்றுள் ளமை விசாரணைகளில் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட சந்தேகநபர் களிடம் நடத்தப்பட்ட நீண்ட விசாரணை களின் போது இந்த விடயம் வெளிக் கொணரப்பட்டதாக பொலிஸார் தெரி வித்தனர்.

கெஹெல்பத்தர பத்மே, கொமான்டோ சலிந்த, தருண், இஷாரா செவ்வந்தி மற்றும் துப்பாக்கிதாரியாக செயற்பட்ட சமிந்து டில்ஷான் ஆகியோர் இந்த கொலையை திட்டமிட்டுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளா கத்தில் 05ஆம் இலக்க நீதவான் அறைக் குள் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோ கத்தில் கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்டார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நல்ல மாற்றம்!

இலங்கை அமைச்சரவையில் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சுக்கான புதிய அமைச்சராக அண்மையில் பதவியேற்ற அநுர கருணாதிலக, பதவியேற்ற சில நாள்களில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அச்சமயம் அங்கு அவர் தெரிவித்த ஒரு கருத்து முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்தப் பயணத்தின் போது, துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பல் போக்குவரத்து மற்றும் தளபாடங்களில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக, அமைச்சர் கருணாதிலக, இந்திய துறைமுகங்கள், கப்பல்துறை, நீர்வழிகள் அமைச்சர் சிறி சர்பானந்த சோனோவாலுடன் இருதரப்பு பேச்சுகளை நடத்தினார்.

மும்பையில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான இந்திய கடல்சார் வார நிகழ்வுகளில் பங்கேற்றார். அந்த நிகழ்வை ஒட்டிய அமைச்சர் மட்டக்கூட்டத்தொடரில் பேசிய அமைச்சர் கருணாதிலகே -

“நாகரிகங்களையும் கலாச்சாரங்களையும் இணைக்கும் பாலங்கள்தான் கடல்கள். கடல்சார் தொழில் என்பது வர்த்தகம், ஆற்றல் மற்றும் இணைப்பு ஆகியவற்றின் உயிர்நாடி. அது, கூட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு மையமாகவும் இருக்கின்றது” - என்று குறிப்பிட்டார்.

இந்தியாவின் சாகர்மாலா திட்டம் மற்றும் கடல்சார் இந்தியா தொலைநோக்கு - 2030 ஆகியவற்றைப் பாராட்டிய அவர், இந்தியப் பெருங்கடல் முழுவதும் வர்த்தகம், இணைப்பு மற்றும் பகிரப்பட்ட செழிப்பை வலுப்படுத்த பிராந்திய ஒத்துழைப்புக்கான கட்டமைப்பை அவை வழங்குகின்றன என்றும் குறிப்பிட்டார். இலங்கை, இந்தியா மற்றும் அண்டை நாடுகளுக்கு இடையிலான கூட்டு முயற்சிகள் பரந்த தெற்காசிய பொருளாதாரத்திற்கு பயனளிக்கும் அதேசமயம், அதன் பிராந்தியம் முழுவதும் தடையற்ற வர்த்தக ஓட்டத்தை ஆதரிக்கும் ஒரு நெகிழ்ச்சியான, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட துறைமுக வலையமைப்பை உருவாக்க முடியும் என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

இந்தியாவுடன் கடல்சார் ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவது இலங்கைக்கு பயனளிக்கத் தக்கது என்பதை இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்துக்கான புதிய அமைச்சர் புரிந்து கொண்டிருக்கின்றமை நல்லதொரு செய்தி.

இதற்கு முன்னர் அவரது பதவியிலிருந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க இத்தகைய ஒத்துழைப்பு முயற்சிகளுக்கு இணங்கி வராமல், இந்தியாவை எதிரி நாடு என்பது போல பாவனை பண்ணி நடந்து கொண்டார். இந்தியாவுக்குப் பக்கத்தில் உள்ளது இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்கள்தான். இலங்கைத் தீவில் தமிழர் தாயகப் பிரதேசம்தான். கடல்சார் தொடர்பாடல் என்பது இந்தியாவுக்கு மிக நெருக்கமான வடக்கு, கிழக்கோடுதான் ஆரம்பிக்கும். ஆனால் அத்தகைய இணைப்பும் ஒத்துழைப்பும் கூட்டு முயற்சிகளும் இலங்கையை சுபீட்சப்படுத்தும் அதே நேரம், அது வடக்கு கிழக்கையும் மேம்படுத்தி விடும் என்ற குறுகிய பேரினவாத மேலாதிக்க சிந்தனை காரணமாக இந்தக் கூட்டு முயற்சிகளுக்காக இந்தியா நீட்டிய நேசக்கரத்தை புறமொதுக்கி - உதாசீனப்படுத்தி - பொறுப்பற்று செயல்பட்டார் பிமல் ரத்நாயக்கா. அது குறித்து இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டி வந்தோம்.

அதனைப் புரிந்து கொண்டு அமைச்சரவை மாற்றத்தை செய்தமை மூலம் இந்த பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வு ஒன்றை இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா கண்டிருக்கின்றார் என்பதை இலங்கையின் துறைமுகங்கள், சிவில் விமான போக்குவரத்துக்கான புதிய அமைச்சர் இந்தியாவில் வைத்து ஒத்துழைப்பு தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

# தமிழ்ச்செல்வனின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நேற்று கிளிநொச்சி அறிவகத்தில்




(ந.லோகதயாளன்)

விமானப் படையின் குண்டு வீச்சுக்கு இலக்காகி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தமிழீழ அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் ஆறு மாவீரர்களின் 18 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு நேற்று உணர்வு பூர்வமாக கிளிநொச்சியில் இடம்பெற்றது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் வட்டார அமைப்பாளர்களுடனான கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தலைமையில் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் நடைபெற்றது.

அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் திருவுருவப்படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து நினைவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் வட்டார அமைப்பாளர்களுடன் சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் மாவீரர் தின நினைவேந்தல் ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.





















# முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் அஞ்சலியுடன் ஆரம்பம்

(பா.சதீசன்)

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினரால் அங்கு நேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு சிரமதானப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லப் பணிக்குழு உறுப்பினர்கள், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உப தபிசாளர் அனோஜன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், மாவீரர்களின் உறவினர்கள் எனப் பலரும் இணைந்து துயிலும் இல்ல வளாகத்துக்கு சென்று சுடரேற்றி அஞ்சலி செலுத்தியமையையடுத்து சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, பணிக்குழு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அங்கு இடம்பெற்றது.

அக் கலந்துரையாடலில் 2025ஆம் ஆண்டுக்குரிய மாவீரர் எழுச்சி நாள் நினைவேந்தலை முன்னிட்டு புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டதோடு, அந்நிகழ்வை எவ்வாறு சிறப்பாக நடத்துவது என்பது குறித்தும் விரிவான பேச்சு இடம்பெற்றது.

கலந்துரையாடலில் பலரும் தங்களது கருத்துக்களை முன்வைத்தனர். இதில், பணிக்குழுவின் தலைவராக விஜிந்தன் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் எனப் பலர் ஒருமித்த கருத்தைத் தெரிவித்தனர்.

அதேவேளை, ஏனைய நிர்வாக உறுப்பினர்களும் புதியதாக தெரிவு செய்யப்பட்டனர். துயிலும் இல்லத்தின் வரவு – செலவு அறிக்கைகள், சிரமதானப் பணிகள் மற்றும் எதிர்வரும் நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

மேலும், வரும் புதன்கிழமை காலை 8 மணிக்கு துயிலும் இல்ல துப்பரவு பணி மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், அதற்கான ஒத்துழைப்பை அனைவரும் வழங்குமாறு பணிக்குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.



















# இராமகிருஷ்ணமிஷனில் ஆன்மீக சொற்பொழிவு



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் கொழும்பு இராமகிருஷ்ணமிஷனும் இணைந்து நடத்தும் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்வு நேற்று முன்தினம் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.30-11.00 மணி வரை கொழும்பு, வெள்ளவத்தை, இராமகிருஷ்ணமிஷன் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் இராம கிருஷ்ண மிஷன் சுவாமி ஸ்ரீமத் சுவாமி அபவர்கானந்தஜி மகராஜ் அவர்களினால் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்த்தப்படவுள்ளது.

சுவாமி அவர்கள் இராமகிருஷ்ண மடத்தின் மாத வெளியீடான "இராமகிருஷ்ண விஜயம்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இறைபணியாற்றி வருகிறார்.

தேவாரம், வரவேற்புரையைத் தொடர்ந்து ஸ்ரீமத் சுவாமி அபவர்கானந்தஜி மகராஜின் ஆன்மீக சொற்பொழிவு இடம் பெற்றது. அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் சமய, சமூக நிறுவனம் சார்ந்தோர் என பலரும் கலந்து கொண்டனர்.

சுவாமி அவர்களுக்கு இந்துக் குருமார் அமைப்பு சார்பில் அதன் தலைவர், சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க வைத்தீஸ்வர குருக்களினால் கௌரவம் செய்யப்பட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அனிருத்தனன் நினைவுப்பரிசு வழங்கினார்.

# 500 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் மீட்பு



நாட்டின் மேற்கு கடலில் நீண்ட நாள் படகிலிருந்து 350 கிலோகிராம் ஐஸ் மற்றும் ஹெரோயின் என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவற்றின் பெறுமதி 500 கோடி ரூபாவிற்கும் அதிகமென பாதுகாப்பு பிரதியமைச்சர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மேற்படி படகிலிருந்த 06 மீனவர்களும் இதன்போது கைது செய்யப்பட்டிருந்தனர்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கடற்படை மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் 400 பில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 54,870 கிலோகிராம் போதைப்பொருட்கள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

5267 கிலோகிராம் கேரள கஞ்சா கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், 16 லட்சத்து 83 ஆயிரத்து 691 போதைவில்லைகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



# வவுனியாப் பல்கலை மாணவன் மரணம்; மது விருந்தா, பகிடி வதையா காரணம்?

## துருவித் துருவிப் பொலிஸார் விசாரணை

(கி.வசந்தன்)

வவுனியாப் பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப பீடத்தில் முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என திடீர் மரண விசாரணை அதிகாரி சுரேஸ் தெரிவித்தார்.

எனினும், இந்த மரணத்திற்கு பகிடிவதை காரணமாக இருக்கலாம் என மாணவரின் உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர், அநுராதபுரம் ஜயசிறிபுர பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய மாணவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை மாலை முதல் நள்ளிரவு வரை பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் மது விருந்துபச்சாரம் இடம்பெற்றுள்ளது. இதன்போது குறித்த மாணவனுக்கு மது கட்டாயப்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

நள்ளிரவு 12 மணியளவில் குறித்த மாணவனை பிறிதொரு மாணவனின் விடுதியில் மாணவர்கள் கொண்டு சென்று விட்டுள்ளனர்.

சனிக்கிழமை காலை குறித்த மாணவன் எழுந்திருக்காத நிலையில் ஏனைய மாணவர்கள் அந்த மாணவனை பூவரசன்குளம் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்தார் எனப் பூவரசங்குளம் பொலிஸார், தெரிவித்தனர்.

மாணவர் உயிரிழந்தபோது, அவரது உடலில் கணிசமான அளவு மதுபான செறிவு இருந்திருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறாயினும், இந்தத் திடீர் மரணத்திற்கு பகிடிவதையே காரணம் என மாணவரின் உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

விசாரணையின் போது, உயிரிழந்த மாணவரின் சகோதரி, கடந்த 31ஆம் திகதி இரவு பல்கலைக்கழக மாணவர்களின் விருந்தொன்றில் சிரேஷ்ட மாணவர்கள் தனது சகோதரருக்கு பலவந்தமாக மதுபானம் வழங்கினர் எனஜ் குறிப்பிட்டுள்ளார்.

தனது சகோதரனுக்கு வேறு எந்த நோயும் இருந்திருக்கவில்லை என்றும், பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பகிடிவதை குறித்து பல தடவைகள் குடும்ப உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவித்தார் எனவும் அவர் கூறியுள்ளார்.

இருப்பினும், இந்தச் சம்பவம் குறித்து வவுனியா ஆதார வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு வினவிய போது, அங்குள்ள வைத்தியர் ஊடகங்களுக்கு தகவல் வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்தார்.














# ரப்பர் தொழிற்சாலை கொதிகொள்கலன் வெடித்ததில் இளைஞர் பலி மூவர் காயம்

**(உடப்பு க.மகாதேவன்)**

எட்டியந்தொட்ட பகுதியில் உள்ள கிரி போறுவ களஞ்சியசாலையில் அமைந்துள்ள ரப்பர் தொழிற்சாலையில் கொதி கொள்கலன் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்தனர்.

ரப்பர் பாலை இரசாயனப் பொருட்களுடன் கலந்து கொண்டிருந்த போது, பயன்படுத்தப்பட்ட போய்லர் ஒன்று நேற்றுக் காலையில் வெடித்ததிலேயே ஓர் இளைஞர் உயிரிழந்தார். மேலும் மூவர் காயமடைந்து கரவனெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்

.வெடிவிபத்து ஏற்பட்ட நேரத்தில் அந்தப் போய்லர் இயந்திரத்தின் அருகில் பணியாற்றிக் கொண்டிருந்த 25 வயதான இளைஞர் ஒருவரே சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.












# எரிபொருள் தொட்டியுடன் சென்ற ரயில் பாதையை விட்டு விலகி தடம் புரண்டது

வில்வத்த மற்றும் மீரிகம இடையிலுள்ள ரயில் நிலைய பகுதியில் நேற்றுக் காலை ரயில் தடம் புரண்டு விபத்து ஏற்பட்டமையால் பாதிக்கப்பட்டது. மட்டக்களப்பிலிருந்து கொலன்னாவ நோக்கி வெற்று எரிபொருள் தொட்டியுடன் சென்ற ரயிலே பாதையை விட்டு விலகி தடம் புரண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.











# ரூ.3 கோடி பெறுமதிமிக்க 100 கிலோ கஞ்சா மீட்பு பருத்தித்துறையில் பெண் உள்பட நால்வர் கைது

(ந.லோகதயாளன்)

பருத்தித்துறை பொலிஸாரின் நடவடிக்கையின் மூலம் மூன்று கோடி ரூபாவிற்கு அதிக பெறுமதியுடைய 100 கிலோ எடையுடைய கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட பெண் ஒருவர் உள்பட நால்வர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்பகுதி ஊடாக கேரள கஞ்சா கடத்தல் தொடர்பில் கடற்படையினரால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று சனிக்கிழமை அதிகாலை சுப்பர்மடம் கடற்கரையில் விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் அதற்கு முன்னர் சட்டவிரோதமாகக் கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட ஒரு தொகை கேரளக் கஞ்சாப் பொதிகள் வாகனம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

இருந்த போதிலும் கடத்தலில் ஈடுபட்ட இருவர் படகுடன் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் கடத்தலின் போது துணை புரிந்த மேலும் ஒரு படகு அடையாளம் காணப்பட்டு பொலிஸாரினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

இரண்டு படகுகளின் வெளி இணைப்பு இயந்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் விசேட பிரிவின் தகவலுக்கு அமைவாக நடத்திய தேடுதலின் போது பருத்தித்துறை அவ்வொல்லை பகுதியில் உள்ள வீடென்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 46 கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

இதன்போது அந்த வீட்டில் இருந்த பெண் ஒருவரும் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் சான்று பொருள்களுடன் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டது.

வழக்கை ஆராய்ந்த நீதிவான், பெண் சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டமையோடு எஞ்சிய மூன்று சந்தேக நபர்களையும் மூன்று தினங்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கினார்.





# இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தீர்வு நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வருகிறது

## எம்.கே.சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டு




"இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் தீர்வு கிடைக்காதுள்ளது."

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய கட்சியின் செயலாளர் நாயகமும் வல்வெட்டித் துறை நகரசபை உறுப்பினருமான எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவே இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையின் தேசிய இனப்பிரச் சினைக்கான தீர்வு நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் தீர்வு கிடைக்காதுள்ளது. ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச மன்றங்களினால் அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களுக்கு குரல் கொடுத்து வருகின்ற போதிலும் அரசியல் தீர்வென்பது கிடைப்பதாக இல்லை.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பொங்குதமிழ் தமிழர் தாயகத்தின் பல இடங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தற்போதைய நிலையில் மீண்டும் பொங்குதமிழ் பிரகடனத்தின் மூலம் ஈழத்தமிழர்களாகிய நாம் எமது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது. உலகெங்கும் தமிழர்கள் வாழும் நாடுகளில் பொங்குதமிழ் நிகழ்வுகளை நடத்தப்பட வேண்டும்.

அந்த வகையில் அவுஸ்திரேலியா – மெல்பேர்ண் நகரில் வரும் 9 ஆம் திகதி பொங்குதமிழ் நிகழ்வு முன்னெடுக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனை தாயக மக்கள் சார்பில் வரவேற்று பாராட்டுகின்றோம். பொது வாக்கெடுப்பு கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் இது முன்னெடுக்கப்பட உள்ளது.

இந்த பொது வாக்கெடுப்பு கோரிக்கையை உள்ளடக்கி வடக்கு மாகாண சபையில் தீர்மானம் ஒன்றை கொண்டு வந்து நிறைவேற்றி இருந்தோம். அதனை குறிப்பிட்டே அமெரிக்க காங்கிரஸ் தீர்மானம் கொண்டு வந்திருந்தது. இவ்வாறு சர்வதேசம் ஏற்றுக்கொண்ட வழிமுறையான பொது வாக்கெடுப்பு கோரிக்கை நியாயமானதாகும்.

அவுஸ்திரேலியா உள்ளிட்ட உலகெங்கிலும் உள்ள எல்லா பாதைகளும் வீதிகளும் மெல்பேர்ண் நகரை நோக்கி திரும்ப வேண்டும். இராமருக்கு பட்டாபிசேகம் இடம்பெற்ற போது அயோத்தி நகரை நோக்கி அணிதிரண்டதை போன்று உலகெங்கும் உள்ள தமிழர்கள் வரும் 9 ஆம் திகதி மெல்பேர்ணை நோக்கி அலை அலையாக அணி திரள வேண்டும் என இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன். மெல்பேர்ண் நகரை தொடர்ந்து தமிழகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்.

உலகில் எத்தனையோ நாடுகள் பொதுவாக்கெடுப்பின் மூலம் சுதந்திர தேசமாக உருவாகியுள்ளன. அந்த வகையில் இலங்கைக்குள் எந்தவொரு தீர்வும் சாத்தியமில்லை என்பது உறுதியான நிலையில் பொதுவாக்கெடுப்பு ஒன்றின் மூலமே எமக்கான அரசியல் தீர்வை அடைய முடியும் என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். ஆகவே பொதுவாக்கெடுப்பு கோரிக்கை தொடர்பில் அனைத்துலக கவனத்தை ஈர்த்து அழுத்தங்களை கொடுக்கும் வகையில் உலகின் சகல நகரங்களிலும் மீண்டும் பொங்குதமிழ் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

புலம்பெயர் வாழ் ஈழத்தமிழர்களும் வாக்களிக்கும் உரிமையுடன் கூடியதான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதன் மூலம் வட கிழக்கு மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்கள் இணைந்து உலகளாவிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது வாக்கெடுப்பின் ஊடாக எமக்கான அரசியல் தீர்வுக்கு வாக்களிக்க வேண்டும்.

பொதுவாக்கெடுப்பின் மூலமே சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர்கள் தமது விருப்பை தாமே தீர்மானிக்க வேண்டும்." – என்றார்.



# மீனவர்களுடன் இணைந்து மீன் பிடித்தார் ராகுல் காந்தி!



பிஹார் தேர்தல் பிரச்சாரத்துக்கு இடையில், பெகுசராய் பகுதியில் ராகுல் காந்தி நேற்று உள்ளூர் மக்களுடன் இணைந்து ஒரு குளத்தில் இறங்கி மீன்பிடித்தார்.

பிஹாரின் பெகுசராய் என்ற இடத்தில் வி.ஐ.பி. கட்சியின் தலைவரும், துணை முதல்வர் வேட்பாளருமான முகேஷ் சாஹ்னியுடன் இணைந்து ஒரு குளத்தின் நடுப்பகுதிக்கு படகு மூலமாக சென்றார் ராகுல் காந்தி. அவர், குளத்தில் நீந்தியபடி மீனவர்களுடன் சேர்ந்து உற்சாகமாக புகைப்படம் எடுத்துள்ளார்.

சம்பவ இடத்தில் ஏராளமான மீனவர்களும் இருந்தனர், அவர்களில் சிலர் இடுப்பு வரை தண்ணீரில் மூழ்கி ராகுல் காந்தியுடன் உரையாடினர்.

இதுகுறித்து ராகுல் காந்தி வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“பிஹார் மாநிலம் பெகுசராயில் உள்ள மீனவர் சமூகத்தினரை வி.ஐ.பி. கட்சித் தலைவர் முகேஷ் சாஹ்னியுடன் சந்தித்தமை மகிழ்ச்சியாக இருந்தது.

அவர்களின் பணி எவ்வளவு சுவாரஸ்யமாக இருந்தாலும், அவர்களின் சவால்களும் போராட்டங்களும் கடினமானவை. இருப்பினும், அவர்களின் கடின உழைப்பு, ஆர்வம் மற்றும் ஆழமான புரிதல் எல்லா சூழ்நிலைகளிலும் ஊக்கமளிக்கின்றன.

பிஹாரின் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் குளங்கள் மற்றும் அவற்றில் வாழும் மீனவர்கள், மாநிலத்தின் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். மீனவர்களின் உரிமைகள் மற்றும் மரியாதையை உறுதி செய்வதற்கான ஒவ்வொரு அடியிலும் நான் அவர்களுடன் நிற்கிறேன்.” – என்றார்.

# வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்வது உண்மையான வாக்காளர்களை நீக்கும் செயல்

## முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்வது உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்கான தந்திரம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கு (எஸ்.ஐ.ஆர்) தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்நிலையில், இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

இதில் தி.மு.க, காங்கிரஸ், இந்திய கொம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், ம.தி.முக, வி.சி.க, மக்கள் நீதி மய்யம், தே.மு.தி.க, திராவிடர் கழகம் உட்பட 49 கட்சிகள் பங்கேற்றன. கூட்டத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகளை தேர்தல் ஆணையம் நிறுத்தி வைக்க வேண்டும். இல்லையென்றால், தமிழக கட்சிகள் சார்பில் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்று ஸ்டாலின் முன்வைத்த தீர்மானம் அனைத்து கட்சிகளின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“மக்கள் வாக்குரிமையை பறிக்கும் விதமாகவும், அவர்களை அச்சுறுத்தும் விதமாகவும் பிஹாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரதிருத்த பணிகள் நடைபெற்றன. அதுபோல தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களிலும் நடைபெற உள்ளது. நேர்மையான தேர்தல் நடத்த உண்மையான வாக்காளர் பட்டியல் அவசியம்தான். அதற்காக உரிய கால அவகாசத்தை கொடுக்க வேண்டும். பதற்றமில்லாத சூழலில் அதை செய்ய வேண்டும். அப்போதுதான் அந்த பணிகளை முறையாக செய்ய முடியும்.

மாறாக தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பாக முழுமையான திருத்தப் பணிகள் செய்ய நினைப்பது உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்கான தந்திரமாகும். அதைதான் பிஹாரில் செய்தார்கள். அதனால்தான் அதனை எதிர்க்கிறோம். தமிழக மக்களின் உரிமைகளைக் காக்க, ஜனநாயக குரலை காக்க வரைவு தீர்மானத்தை முன் வைத்துள்ளோம். “ என்று தெரிவித்தார்.




# கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்;

## தொடரும் தீவிர விசாரணை

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக கடந்த சில நாள்களாக, சம்பவம் நடந்த வேலுசாமிபுரத்தில் அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, தற்போது சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் விசாரணைகளை மேற்கொள்ள அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் கடந்த செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி கரூர் வேலுசாமிபுரத்தில் பிரசாரம் மேற்கொண்டார்.

இந்த பிரசாரத்தில் கூட்டநெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 110 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.


இந்த சம்பவம் தமிழக அரசியல் தாண்டி உலகளவில் பேசப்பட்டது.

பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பாக இந்திய உச்சநீதிமன்றம் உத்தரவுப்படி அதிகாரிகள் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

தொடர்ந்து விசாரணையை அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ள நிலையில் அடுத்த கட்டமாக பனையூரில் உள்ள தமிழக வெற்றிக் கழக அலுவலகத்தில் விசாரணை நடத்த உள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

விஜய்யின் பிரசார வாகனம் மற்றும் அந்த வாகனத்தில் பதிவாகி இருந்த சி.சி.டி.வி. கெமரா காட்சிகளையும் ஆய்வு செய்ய உள்ளதாகக் கூறப்படுகிறது.





# அமெரிக்கா - சீனா இராணுவ தொடர்புகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தம் செய்தன

அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு உலக சக்திகள், தங்களுக்கிடையிலான இராணுவ தொடர்புகளை மீண்டும் தொடங்க ஒப்பந்தம் செய்துள்ளன.

இந்த முடிவு, மலேசியாவில் நடைபெற்ற பிராந்திய உச்சி மாநாட்டின் போது அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத் மற்றும் சீன பாதுகாப்பு அமைச்சர் டொங் ஜுன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பில் எடுக்கப்பட்டது.

இந்த சந்திப்பிற்கு முன்னதாக, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் ஆகியோர் தென் கொரியாவில் நேரில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து, ஹெக்செத் தனது எக்ஸ் கணக்கில் “இரு மகத்தான நாடுகளுக்கிடையே அமைதி, நிலைத்தன்மை மற்றும் நல்ல உறவுகள் தான் சிறந்த பாதை” எனக் குறிப்பிட்டார்.

இரு அமைச்சர்களும் எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சனைகளை தவிர்க்கவும், தணிக்கவும் இரு நாட்டு இராணுவங்களுக்கு இடையிலான தொடர்பு வழிகளை உருவாக்க வேண்டும் என ஒப்பந்தம் செய்துள்ளனர்.

இந்த வகை தொடர்பு வழிகள் கடந்த சில ஆண்டுகளாக இருந்தாலும், சில நேரங்களில் பயன்படுத்தப்படாமல் இருந்தது. தற்போது, இரு நாடுகளும் மீண்டும் அவற்றை செயல்படுத்த திட்டமிட்டுள்ளன.

இதுதொடர்பில், சீன பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், “நம்பிக்கையை வளர்க்கவும், சந்தேகங்களை நீக்கவும், சமநிலை மற்றும் மதிப்பீடு அடிப்படையிலான இராணுவ உறவுகளை கட்டமைக்க வேண்டும்” என டொங் ஜுன் கூறினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்ட ‘பாகுபலி’ சி.எம்.எஸ் -03 செயற்கைக்கோள்!

எல்.வி.எம்-3 ரொக்கெட் மூலம் கடற்படை பயன்பாட்டுக்கான சி.எம்.எஸ்-03 செயற்கைக்கோள் திட்டமிட்ட சுற்றுப் பாதையில் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது. இதன்மூலம் தனது வரலாற்றில், புவிவட்ட சுற்றுப் பாதைக்கு அதிகபட்ச எடை கொண்ட செயற்கைக்கோளை செலுத்தி இஸ்ரோ சாதனை படைத்துள்ளது.



இந்தியாவுக்கு முக்கிய தேவையான தொலைத்தொடர்பு, தொலையுணர்வு, வழிகாட்டுதல் செயற்கைக்கோள்களை பி.எஸ்.எல்.வி, ஜி.எஸ்.எல்.வி, எல்.வி.எம்-3 ரொக்கெட்டுகள் வாயிலாக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) விண்ணில் நிலைநிறுத்தி வருகிறது.

இதில் ரொக்கெட் வாயிலாக புவிவட்ட சுற்றுப் பாதைக்கு 4,000 கிலோ வரையும், குறைந்த தாழ் வட்ட சுற்றுப் பாதைக்கு 8,000 கிலோ வரையும் எடை கொண்ட செயற்கைக்கோள்களை மட்டுமே விண்ணில் செலுத்த முடியும். இதனால் அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களை பிற நாடுகளின் உதவி கொண்டு விண்ணில் செலுத்த வேண்டிய நிலை இருந்தது. அதனால் செலவீனம் அதிகரிப்பதுடன், கால விரயமும் ஏற்பட்டது.

இதையடுத்து அனைத்து ரொக்கெட்களின் உந்துவிசைகளை அதிகரிக்கும் பணிகளை இஸ்ரோ முன்னெடுத்தது. அதன்பலனாக இஸ்ரோவின் பாகுபலி என்றழைக்கப்படும் எல்.வி.எம்-3 ரொக்கெட்டின் எஸ் 200 மோட்டார்கள், விகாஸ் இயந்திரம், கிரையோஜெனிக் இயந்திரம் ஆகியவற்றின் திறன்கள் மேம்படுத்தப்பட்டு அதன் உந்துவிசை வழக்கத்தைவிட 14 விநாடிகள் வரை அதிகரிக்கப்பட்டது. இதையடுத்து எல்.வி.எம்-3 ரொக்கெட் மூலமாக 4,410 கிலோ எடை கொண்ட சி.எம்.எஸ்-03 செயற்கைக்கோளை விண்ணில் புவிவட்டப் பாதைக்கு செலுத்த இஸ்ரோ முடிவு செய்தது.

இந்த ராக்கெட் ஏவுதலுக்கான 24 மணி நேர ‘கவுன்ட்டவுன்’ நேற்று முன்தினம் தொடங்கியது. தொடர்ந்து ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் மையத்தின் 2 ஆவது ஏவுதளத்தில் இருந்து எல்.வி.எம்-3 ரொக்கெட் நேற்று மாலை 5.26 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

ரொக்கெட் தரையில் இருந்து புறப்பட்ட 16 நிமிடத்தில் செயற்கைக்கோளை 169 கி.மீ உயரத்தில் திட்டமிட்ட புவிவட்ட பரிமாற்ற சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தியது. இதன் சுற்றுப்பாதை படிபடியாக மாற்றப்பட்டு குறைந்தபட்சம் 170 கிலோ மீற்றர் தூரமும், அதிகபட்சம் 29,970 கிலோ மீற்றர் தொலைவும் கொண்ட புவிவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்படஉள்ளது.

இது முழுவதும் இந்திய கடற்படை மற்றும் இராணுவத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 03.11.2025

## மேஷம்

இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும்.குழப்பங்களும் கவலைகளும் நிறைந்திருக்கும்.இன்று சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு உகந்த நாள் அன்று.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணி நிமித்தமான பயணம் இன்று காணப்படும். உங்கள் வேலைகளை திட்டமிடுவது இன்று முக்கியம்.

இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுபடுத்த வேண்டும்.

நிதி நிலைமை நீங்கள் எதிர்பார்த்தது போலன்றி எதிர்மறையான பலன்களைத் தரும்.

உங்களிடம் காணப்படும் பதற்றம் காரணமாக உங்களுக்கு கால் வலி ஏற்படலாம்.

## ரிஷபம்

இன்ற உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள். இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.

## மிதுனம்

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடவேண்டும். அது உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். அதே சமயத்தில் வேலையின் தொடக்கத்தில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. துணையிடம் அன்பான உரையாடல்களில் ஈடுபடலாம்.

உங்கள் தேவைகளுக்கு கடன் வாங்க நேரலாம். அதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படலாம். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உணவு முறை மேற்கொள்ளவும்.

## கடகம்

இன்று நீங்கள் சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள்.பொறுப்புகள் காணப்படும்.இன்று செய்யும் செயல்களை சரியாக திட்டமிட்டுச் செய்தால் நீங்கள் வெற்றி காணலாம்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாளாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் துணையிடம் உங்கள் நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கிய பிரச்சினை காணப்படும். அதற்காக செலவு செய்ய நேரும்.

## சிம்மம்

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை. இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## கன்னி

இன்று சாதகமான நாள்.உங்களின் முயற்சி சிறியதாக இருந்தாலும் வெற்றி காண்பீர்கள்.உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## துலாம்

இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று பணியில் சவால்களும் போட்டிகளும் நிறைந்து காணப்படும்.இந்த சவால்களை திறமையாக சமாளிக்க வேண்டிய நிலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்வது நல்லது.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.புதிய முயற்சிகள் எடுத்து அதில் வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மன நிலையில் இருப்பீர்கள்.

இன்று பணி நிமித்தமான பயணம் காணப்படும். உங்கள் பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விடாப்பிடியான எண்ணம் கொண்டு எந்த முயற்சியும் செய்யாதீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உறவில் நல்லிணக்கம் இருக்கும்.

இன்று அதிர்ஷ்டம் காணப்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உணவில் கவனம் செலுத்த வேண்டும். உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.11.2025




இன்று மந்தமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாளாக அமையாது.முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தள்ளிப் போட வேண்டும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டத் தக்க வகையில் இருக்காது. பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்ளவும். இதனால் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைக்க முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. இன்று வரவும் செலவும் சேர்ந்து காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள். பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று காதலில் முழு திருப்தி உண்டாவதற்கு உகந்த நாள். இன்று காதலில் புதிய அத்தியாயத்தை தொடங்குவீர்கள்.

நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால் இன்று அதிக லாபம் கிடைக்கும்.

நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். உடற்பயிற்சி மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியையும் மன ஆறுதலையும் தரும்.

பணி நிமித்தமான பயணங்கள் இன்று காணப்படும். பணியில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு பொருத்தமான நாளாக உணர்வீர்கள். உங்கள் காதலை உங்கள் தந்தையிடம் கூறுவீர்கள். அது உங்களுக்கு சாதககமாக இருககும்.

ஏழைகளுக்கு தொண்டு செய்து அவர்கள் ஆசி பெறுவதன் மூலம் உங்களுக்கு நற்பலன்கள் கிடைக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

# சீதாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் உண்டியல் உடைத்து பணம் திருட்டு




வரலாற்று சிறப்புமிக்க நுவரெலியா சீதாஎலிய சீதையம்மன் ஆலயத்தின் உண்டியல்கள் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

ஆலயத்திற்குள் நேற்று முன்தினம் இரவு நுழைந்த சிலர் அங்கிருந்த 03 உண்டியல்களை உடைத்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலய சி.சி.ரி.வி. கமெராக்களுக்குரிய டி.வி.ஆர்.கருவியும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உடைக்கப்பட்ட 03 உண்டியல்கள் ஆலய வளாகத்தில் வீசப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் சீதாஎலிய சீதையம்மன் ஆலய பாதுகாவலரிடம் விசாரணை முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.